# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 11196 / 2007 / எம்சி. 8 நாள் 12.6.2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜுன் 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 22.6.2007 ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா உறால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

மன்றச் செயலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :

துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி

## 22-6-2007-ம் தேதி மாமன்ற சாதாரணக்  கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) | திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் | 1 |
| ஆ) | தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | 2 |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள், | |
| 1. | பொறியியல் பிரிவு - ஜவகர்லால்நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் - மத்திய நகர்ப்புற அமைச்சகம் ஒப்புதல் வழங்கிய திட்டங்கள் - விரிவான விளக்கங்கள்  அளித்தல் - தொடர்பாக. | 3 |

நன்றியுரை .

## திருக்குறள்

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

குறள் - 666

## விளக்கம்

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

திருவள்ளுவர்

**ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

பொருள் எண் - 1

கோவை மாநகராட்சி ஜவகர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டம் - பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் பற்றிய விளக்கம் அளித்தல் - பற்றியது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஜவகர்லால்நேரு தேசிய நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மத்திய நகர்புற அமைச்சகத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்கள் பற்றிய விரிவான விளக்கங்கள் அளிக்க வேண்டுமென்ற உறுப்பினர்களின் கோரிக்கையை தொடர்ந்து கீழ்காணும் திட்டங்களுக்கான விரிவான விளக்கங்கள் பற்றிய பொருள் மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு ரூ கோடியில் |
|---|---|---|
| 1. | பில்லூர் II குடிநீர் திட்டம் | 113.74 |
| 2. | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 96.51 |
| 3. | நகர்புற ஏழ்மை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாடு செய்தல் | 258.75 |
| | | 469.00 |

அலுவலகக் குறிப்பு - மன்றத்தின் விவாதத்திற்கு ந.க.எண் - 8251/2005/ எம்.டி. 3

## மாநகர மன்ற தீர்மான எண் 40 நாள் 22.06.07

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், ஜவகர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள 1. பில்லூர் குடிநீர் 2-ம் திட்டம் 2. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 3. நகர்புற ஏழ்மை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் குறித்து மாமன்ற உறுப்பினர்கள் தங்களின் சந்தேகங்களை கேட்டு விளக்கம் பெறலாம் என அறிவித்தார்.

## பில்லூர் குடிநீர் 2-ம் திட்டம் :

பில்லூர் குடிநீர் 2-ம் திட்டம் குறித்து, மாமன்ற அ.இ.அ.தி.மு.க கட்சிக்குழுத் தலைவர் திரு பி. ராஜ்குமார், அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த 52-வது வார்டு உறுப்பினர் திரு எம். நடராஜ், 1-வது வார்டு உறுப்பினர் திரு கு. சந்திரசேகரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த குழுத்தலைவர் திரு சி. பத்மநாபன் , திரு எம்.எஸ். வேல்முருகன் (57 வது வார்டு), இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குழுத் தலைவர் திரு கு. புருசோத்தமன், கல்விக்குழுத் தலைவர் திரு ஆர். கல்யாண சுந்தரம், தி.மு.க-வைச் சேர்ந்த வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் திரு அ. நந்தகுமார், சுகாதாரக்குழுத் தலைவர் திரு பி. நாச்சிமுத்து, நகரமைப்புக்குழுத் தலைவர் திரு பி. கிருஷ்ணமூர்த்தி, கிழக்கு மண்டலத் தலைவர் திரு எஸ். எம். சாமி, மற்றும் சுயேட்சை மாமன்ற உறுப்பினர்கள் திரு என். கே. அசோக்குமார் (12-வது வார்டு), திருமதி ஏ. அமுதாராணி (38-வது வார்டு), மற்றும் திருமதி என். ரேவதி (50-வது வார்டு) ஆகியோர் தங்களது பாராட்டு மற்றும் குறைபாடு கருத்துக்களை தெரிவித்து, மத்திய அரசின் 50 சதவீதம் மான்யத்துடன் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதனை வரவேற்பதாகவும், மேலும் சில விபரங்கள் தேவை எனவும் தெரிவித்தனர்.

ஆணையாளர் அவர்கள் பதிலளிக்கையில், பில்லூர் தனி குடிநீர் திட்டம் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நாளொன்றிற்கு 125 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யும் அளவில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு, கடந்த 28.12.2006-ல் மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை, மத்திய ஒப்புதல் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து செயற்பொறியாளர் தெரிவிக்கையில், பில்லூர் குடிநீர் திட்டத்தில் நீர் எடுக்கும் கிணறு குகைவரையுள்ள நீர் ஏற்றும் இரும்புக்குழாய், குகைநீர்வழி மற்றும் கட்டன் மலை குகைநீர்வழி ஆகிய அமைப்புகள் பொதுவான அமைப்புகளாக இருக்கிறது. இந்த அமைப்புகளை எவ்வாறு பராமரிப்பது என்பது குறித்து, நகராட்சி நிர்வாகத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய துறைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவின் வழிகாட்டுதலின்படி பராமரித்துக் கொள்ளவும், மாநகரில் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தி 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் செய்யும் வண்ணம் பகிர்மானத் திட்டத்தினை சீரமைக்க ஆலோசகர்களை நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து JNNURM திட்டத்தின்கீழ் நிறைவேற்றவும் இருப்பதாக தெரிவித்தார்.

ஆணையர் அவர்கள் தொடர்ந்து, JNNURM திட்டங்களுக்கென பிரத்யேகமாக கண்காணிப்பு பொறியாளர், செயற் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் அரசால் நியமிக்கப்பட உள்ளதாகவும், இப்பணியிடங்களில் ஒரு பகுதியினை மாநகராட்சி அலுவலர்களைக் கொண்டு நிரப்பப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனை அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

## திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்:

திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் குறித்து மாமன்ற அ.இ.அ.தி.மு.க கட்சிக்குழுத் தலைவர் திரு பி. ராஜ்குமார், அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த 55-வது வார்டு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி, 64-வது வார்டு உறுப்பினர் திருமதி எச். மெஹர்பான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுத்தலைவர் திரு சி. பத்மநாபன், திரு எம்.எஸ். வேல்முருகன் (57 வது வார்டு), திரு என். முருகேசன் (68-வது வார்டு), திருமதி மு. கனகமணி (7-வது வார்டு), திரு என். முருகேசன் (35-வது வார்டு), இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குழுத் தலைவர் திரு கு. புருசோத்தமன், கல்விக்குழுத் தலைவர் திரு ஆர். கல்யாண சுந்தரம், தி.மு.க-வைச் சேர்ந்த எதிர்கட்சித் தலைவர் திரு வி.என். உதயகுமார், சுகாதாரக்குழுத் தலைவர் திரு பி. நாச்சிமுத்து, வரிவிதிப்புக்குழுத் தலைவர் திரு அ. நந்தகுமார், கிழக்கு மண்டலத் தலைவர் திரு எஸ்.எம். சாமி, மேற்கு மண்டலத் தலைவர் திரு வி.பி. செல்வராஜ், திரு தனராஜ் (10-வது வார்டு), திரு பி. இராஜேந்திர பிரபு (44-வது வார்டு), திரு ஆர்.எம். சேதுராமன் (31-வது வார்டு), இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஆளும்கட்சித் தலைவர் திரு ஆர்.எஸ். திருமுகம், திரு வி.கே.எஸ்.கே. செந்தில்குமார் (33-வது வார்டு), மதிமுக-வைச் சேர்ந்த திரு வெ.கி. இராஜேந்திரன் (47-வது வார்டு), மற்றும் சுயேட்சை மாமன்ற உறுப்பினர்கள் திரு என். கே. அசோக்குமார் (12-வது வார்டு), திரு பெ. பாலசுப்பிரமணியன் (19-வது வார்டு), திருமதி ஏ. அமுதாராணி (38-வது வார்டு), ஆகியோர் தங்களது பாராட்டு மற்றும் குறைபாடு கருத்துக்களை தெரிவித்து, மேலும் சில விபரங்கள் தேவை எனவும் தெரிவித்தனர்.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பதிலளிக்கையில், ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, ஒவ்வொரு வார்டு பகுதிக்கும் மாமன்ற உறுப்பினர் தலைமையில் CIVIC AMENITIES COMMITTEE அமைக்கப்பட்டு, இக்குழுவில் மாநகராட்சியின் சேவைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதில் ஆர்வம் கொண்ட குடியிருப்போர் நல சங்க பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இதர சங்கங்கள் மற்றும் தனியார் முதலியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள் எனவும், அந்த உறுப்பினர்கள் அவ்வார்டு குறித்த திட்டங்களை செயல்படுத்தவும் திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட JNNURM திட்டங்களை செயல்படுத்தவும் ஆலோசனைகள் வழங்குவார்கள். இக்குழுவின் உறுப்பினர்கள், மேயர், துணை மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்படுவார்கள். மக்கள் பிரதிநிதிகளான மாமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இக்குழு அமைக்கப்படுவதால் தனியாக மக்கள் கண்காணிப்புக்குழு அமைக்கத் தேவையில்லை எனத் தெரிவித்தார்.

ஆணையர் அவர்கள் தொடர்ந்து பதிலளிக்கையில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மத்திய, மாநில அரசுகள் தெரிவிக்கும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மாநகருக்கு பொருந்தும் வகையில் இரண்டாம் கட்ட குப்பை சேகரிக்கும் பணிகள் மற்றும் உரக்கிடங்கு பராமரிக்கும் பணிகள் ஆகியவற்றில் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) மூலம் செயல்படுத்தவும் உள்ளதாக தெரிவித்தார்.

## நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டம்:

நகர்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டம் குறித்து மாமன்ற அ.இ.அ.தி.மு.க கட்சிக்குழுத் தலைவர் திரு பி. ராஜ்குமார், அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த 55-வது வார்டு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுத்தலைவர் திரு சி. பத்மநாபன் , திரு எம்.எஸ். வேல்முருகன் (57 வது வார்டு), திரு என். முருகேசன் (68-வது வார்டு), திருமதி மு. கனகமணி (7-வது வார்டு), இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குழுத் தலைவர் திரு கு. புருசோத்தமன், தி.மு.க-வைச் சேர்ந்த சுகாதாரக்குழுத் தலைவர் திரு பி. நாச்சிமுத்து, நியமனக்குழு உறுப்பினர் திரு ஜி.டி. இராஜேந்திரன், எதிர்கட்சித் தலைவர் திரு வி.என். உதயகுமார், திரு பி. இராஜேந்திர பிரபு (44-வது வார்டு), திரு டி.ஏ. அப்துல் நாசர் (39-வது வார்டு), இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பணிக்குழுத் தலைவர் திரு ஆர். ராமசாமி மற்றும் சுயேட்சை மாமன்ற உறுப்பினர் செல்வி ந. கமலவேணி (53-வது வார்டு ) ஆகியோர் தங்களது பாராட்டு மற்றும் குறைபாடு கருத்துக்களை தெரிவித்து, மேலும் சில விளக்கங்கள் தேவை எனவும் தெரிவித்தனர்.

ஆணையர் அவர்கள் பேசும்போது, நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்பாடு செய்தல் திட்ட செயலாக்கம் குறித்து விரிவாக ஆய்வு செய்து, பயனாளிகள் யாரும் விடுபடாத வண்ணம், மத்திய, மாநில அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி திட்டம் செயல்படுத்தப்படும் என தெரிவித்தார். மேலும் நீர் நிலைகள், குளம் புறம்போக்கு, சாலை ஓரங்கள் போன்ற இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் அனைவருக்கும் உக்கடம் கழிவுநீர் பண்ணையில் மேலும் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து மூன்றாம் கட்டமாக இத்திட்டத்தை நிறைவேற்றலாம் என தெரிவித்தார். இதனை அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வரவேற்று ஏற்றுக் கொண்டனர்.

மேற்கண்ட விவாதங்களை பதிவு செய்து விரைவில் திட்டங்களை செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி